சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்

http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
30 ஆகஸ்ட் 2014
புது தில்லி
12 பக்கங்கள் ரூ. 2

# சென்னை மருத்துவருக்கு சாதனையாளர் விருது

நமது நிருபர்

**புதுதில்லி, ஆக.29:** மருந்து ஆராய்ச்சிக்காக சென்னையைச் சேர்ந்த 'ஆரோஸ் ஹெல்த்கேர் ஆராய்ச்சி-மேம்பாட்டு' நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் வி.டி. ஸ்ரீராமுக்கு 'இந்தியன் லீடர்ஷிப்' என்ற விருது தில்லியில் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

அனைத்திந்திய சாதனையாளர்கள் அமைப்பு சார்பில் தொழில், நிதி மற்றும் வணிகம், கல்வி, சுகாதாரம், மருத்துவ சிகிச்சை, மருத்துவமனைகள், ஹோட்டல் மற்றும் சுற்றுலா, இதழியல் உள்ளிட்ட துறைகளில் சாதனை புரிபவர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் விருது வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த ஆண்டு விருது வழங்கும் விழாவையொட்டி, 'தேசிய மேம்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பு' என்ற தலைப்பிலான கருத்தரங்கை அந்த அமைப்பு தில்லியில் வியாழக்கிழமை நடத்தியது. நிறைவாக, பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கி வரும் 45 பேருக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

அதில், மருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டதற்காக சென்னையைச் சேர்ந்த 'ஆரோஸ் ஹெல்த்கேர் ஆராய்ச்சி-மேம்பாட்டு' நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் வி.டி. ஸ்ரீராமுக்கு ஸ்ரீராமுக்கு சிறந்த சாதனையாளர் விருதும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டன.



தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மருந்து ஆராய்ச்சிக்காக சென்னையைச் சேர்ந்த 'ஆரோஸ் ஹெல்த்கேர் ஆராய்ச்சி-மேம்பாட்டு' நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் வி.டி. ஸ்ரீராமுக்கு 'இந்தியன் லீடர்ஷிப்' விருதை வழங்குகிறார்கள் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஜி.வி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஆளுநர்கள் பீஷ்ம நாராயண் சிங், ஓ.பி வர்மா உள்ளிட்டோர்.

விருது பெற்றது குறித்து ஸ்ரீராம் 'தினமணி' நிருபரிடம் கூறுகையில், 'கல்லீரல் தொற்று, ஹெபடைட்டஸ் சி, சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்கள் தொடர்பாக தற்போது மருந்து ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளோம். பல்வேறு நோய்களுக்காக அளிக்கப்படும் மருந்துகளை மனிதர்களிடம் பரிசோதனை முறையில் செலுத்தி அதன் பயன்கள், பாதிப்புகளை ஆராய்ந்து எது சரியான மருந்து என்பதை உலகுக்கு உணர்த்தும் சேவையில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம்.

இந்திய மருந்து ஆராய்ச்சி சங்கம், உலகசுகாதார நிறுவனம் ஆகியவற்றின் அனுமதியுடன் இந்த சேவையில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். மருத்துவம், மருந்தகம் ஆகிய பிரிவுகளில் செய்யும் ஆராய்ச்சிகளுக்காக அளிக்கப்படும் இது போன்ற விருதுகளை மத்திய அரசும் அளித்தால் எங்களுக்கு மேலும் ஊக்கம் கிடைக்கும்' என்றார்.

விருது பெற்றவர்களில் இசைத் துறையில் சாதனை படைத்ததற்காக வீணை கலைஞர் சரஸ்வதி ராஜகோபாலன், கல்விச் சேவைக்காக எஸ்என்எஸ் கல்வி நிறுவனத் தலைவர் எஸ்.என். சுப்பிரமணியன் உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங் தமது உரையை தமிழில் 'அனைவருக்கும் வணக்கம்' என்று கூறித் தொடங்கினார். அப்போது அவர், 'மாநிலங்களில் முதல் குடிமகனாக திகழும் ஆளுநர்கள், அந்தந்த மாநில மொழியை கற்பது அவசியம். அந்த வகையில், தமிழ், சம்ஸ்கிருதம் ஆகியவை உலகின் தொன்மையான மொழிகளாகும். அதில், பரவலாகப் பேசப்படும் மொழியாகத் தமிழ் திகழ்கிறது. நம் நாட்டின் வளர்ச்சி வலுவான நமது ஜனநாயகத்தால் ஏற்பட்டது. ஒட்டுமொத்த பொருளாதார உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு திட்டங்களை வகுத்து வருகிறது. அவை பயனாளிகளை முழுமையாகச் சென்றடைய வேண்டும்' என்றார்.

முன்னாள் ஆளுநரும், கேரள மாநில உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியுமான ஓ.பி. வர்மா பேசுகையில், 'நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது அனைவரது கடமையாகும். மக்கள்தொகையில் 50 சதவீதமானோர் இளையோர். இவர்களின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி சமூகத்தில் சமத்துவம், தரமான கல்வி ஆகியவற்றை அளித்து சாதனைகளைப் படைக்க வேண்டும்' என்றார்.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், 'பொருளாதார துறைகளில் இந்தியா வளர்ச்சியடைந்து சர்வதேச அளவில் தரமான பொருள்களை உற்பத்தி செய்வதில் முனைப்பு காட்ட வேண்டும்' என்றார்.

சிபிஐ முன்னாள் இயக்குநர் ஜோகிந்தர் சிங், 'வாழ்வில் முன்னேற நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்வது அவசியம். நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள், சூழல்கள் ஆகியவற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்' என்றார்.

**Link:** http://epaper.dinamani.com/329003/Dinamani-Delhi/30-08-2014#page/2/1

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
30 ஆகஸ்ட் 2014
சென்னை
14 பக்கங்கள் ரூ. 4

# வாகன நிறுத்த மேலாண்மை: திருத்திய ஒப்பந்தம் கோர முடிவு

**சென்னை, ஆக. 29:** சென்னையில் வாகன மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு புதிய திருத்தப்பட்ட ஒப்பந்தத்தை வெளியிட சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில் அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய இடவசதி இல்லாத காரணத்தால் வாகனங்களை நிறுத்த இடமின்றி வாகன ஓட்டிகள் அவதியடைந்து வருகின்றனர்.

இந்தக் குறையைப் போக்கும் வகையில், வாகன நிறுத்துமிட மேலாண்மை திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சி முடிவு செய்தது.இந்தத் திட்டத்தின்படி, தனியார் நிறுவனம்மூலம்வாகன நிறுத்தங்களை மேலாண்மை செய்ய ஒப்பந்தம் கோரப்பட்டது.

இதன்படி, இணையதளத்தில் பதிவு செய்து, ஸ்மார்ட் அட்டைகள் மூலம் வாகன நிறுத்தத்துக்கான கட்டணம் செலுத்த முடி என்ற விதியுடன் ஒப்பந்தம் கோரப்பட்டது. இதனால், சென்னை மாநகராட்சிக்கு உத்தரவாதத் தொகை கிடைக்காது. எனவே வாகன நிறுத்தத்தின் பரப்பளவு அடிப்படையில் கட்டணம்வசூலித்தால்,மாநகராட்சிக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. மேலும் வாகனத்தின் எண்ணிக்கை அதிகமாகும்போது, பரப்பளவு அடிப்படையில் வசூலிக்கும் தொகையுடன், வாகனம் நிறுத்துவதற்கான கட்டணமும் பெறமுடியும்.

இதனால், ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, புதிய திருத்திய ஒப்பந்தத்தை கோர மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இதற்கான தீர்மானம் வியாழக்கிழமை நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பழையத் திட்டம் ரத்து:** இந்த நிலையில் வாகன நிறுத்துமிடங்

விருது..



தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மருந்து ஆராய்ச்சிக்காக சென்னையைச் சேர்ந்த 'ஆரோஸ் ஹெல்த்கேர் ஆராய்ச்சி-மேம்பாட்டு' நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் வி.டி. ஸ்ரீராமுக்கு 'இந்தியன் லீடர்ஷிப்' விருதை வழங்குகிறார்கள் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஜி.வி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஆளுநர்கள் பீஷ்ம நாராயண் சிங், ஓ.பி வர்மா உள்ளிட்டோர்.

# வன உயிரின பாதுகாப்பு வார கலை, இலக்கியப் போட்டி

**சென்னை, ஆக29:** வன உயிரின பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக் ...டுகிறது. இந்த ஆண்டு மாணவர்களுக்கிடையே ஓவியம், பேச்சு, வினாடி-வினா போட்டிகளை ... பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கலாம். வன உயிரினங்களின் பாதுகாப்பு, முக்கியத்துவம்

# வீடற்றோருக்கான காப்பகங்கள்: தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு

**சென்னை, ஆக. 29:** சென்னை மாநகராட்சியின் இரவு நேரக் காப்பகங்களை நிர்வகிக்க தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இதற்கான அறிவிப்பை மேயர் சைதை துரைசாமி வெளியிட்டார். இந்த அறிவிப்பின் விவரம்:

உச்சநீதிமன்ற ஆணையின்படி ஒவ்வொரு மாநகராட்சியிலும் 1 லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம் வீடற்றோருக்காக ஏற்படுத்த வேண்டும். சென்னையின் மக்கள் தொகை 70 லட்சம் ஆகும். நீதிமன்ற உத்தரவின்படி 70 காப்பகங்களை ஏற்படுத்த வேண்டும். இப்போது 28 காப்பகங்கள் சென்னை மாநகராட்சியின் நிதி உதவியோடு நடைபெற்று வருகிறது.

இந்தக் காப்பகங்களை தொண்டு நிறுவனங்கள் நிர்வகிக்க விதிமுறைகளை மாநகராட்சி வகுத்துள்ளது. சேவை மனப்பான்மையுடன் செயலாற்றி வரும் தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், தனியார் தொழில் நிறுவனங்கள் ஆகியவை காப்பகத்தை நடத்த முன்வரலாம்.

வீடற்றோருக்கான காப்பகங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் போன்றவற்றை நிர்வகித்த அனுபவம் இருக்க வேண்டும்.

நன்கொடையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியை நன்கு நிர்வகித்த அனுபவமும் இருக்க வேண்டும்.

அரசு நிறுவனங்களுடன் அல்லது அரசுத் திட்டங்களில் சேர்ந்து பணிபுரிந்த அனுபவமும், இதற்கு முன் செயல்படுத்திய

Link : http://epaper.dinamani.com/329201/Dinamani-Chennai/30082014#page/3/1